# April 14, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பாரசீக வளைகுடா அல்லது ஓமன் வளைகுடாவில் ஈரான் துறைமுகங்களுக்கு ஆபத்து ஏற்பட்டால், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள எந்தத் துறைமுகமும் (வளைகுடா நாடுகளின் துறை முகங்கள்) பாதுகாப்பாக இருக்காது என்று ஈரான் எச்சரித்துள்ளது.

(i) ஈரான் துறைமுகங்கள் மற்றும் கடலோரப் பகுதிகளில் நுழையும் அல்லது அங்கிருந்து வெளியேறும் அனைத்துக் கப்பல்களும் தடுக்கப்படும் என்று அமெரிக்கா தெரிவித்ததைத் தொடர்ந்து, ஈரான் இவ்வாறு எச்சரித்துள்ளது.

(ii) அதேவேளையில், ஈரான் துறை முகங்கள் மற்றும் கடலோரப் பகுதிகள் முடக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

(iii) மேற்காசியாவில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தாக்குதல் நடத்திவந்த நிலையில், போரை 2 வாரத்துக்கு நிறுத்திவைப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அண்மையில் அறிவித்தார்.

(iv) இதைத் தொடர்ந்து, பாகிஸ்தானில் அமெரிக்கா-ஈரான் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் உடன்பாடு ஏற்படாமல் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

(v) இதையடுத்து, ஹோர்முஸ் நீரிணைக்குள் நுழையும் அனைத்துக் கப்பல்களையும் அமெரிக்க கடற்படை தடுக்கும் நடவடிக்கை தொடங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். அந்த நீரிணை வழியாகப் பிற நாடுகளின் கப்பல்கள் பயணிக்க ஈரான் சுங்கக் கட்டணம் வசூலித்து முறைகேடாகப் பணம் பறித்து லாபம் ஈட்டு வதை அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

(vi) இந்நிலையில், போரை முடிவுக்குக் கொண்டுவரும் அமைதி ஒப்பந்தத்தை ஏற்கவும், ஹோர்முஸ் நீரிணையை அனைத்து நாடுகளின் கப்பல்களுக்குத் திறந்துவிடவும் அழுத்தம் அளிக்கும் நோக்கில், ஈரானின் அனைத்துத் துறைமுகங்கள் மற்றும் கடலோரப் பகுதிகள் திங்கள்கிழமை முதல் முடக்கப்படும் என்று அமெரிக்க ராணுவம் அறிவித்தது.

2.ஈரான் கச்சா எண்ணெய்யுடன் இந்தியா வந்த 2 கப்பல்கள்

(i) ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு 2 கப்பல்கள் இந்தியா வந்துள்ளன. கடந்த 7 ஆண்டுகளில் இந்தியாவுக்கு ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் வருவது இதுவே முதல்மு றையாகும்.

(ii) அமெரிக்கா விதித்த தடை காரணமாக ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா கடந்த 2019-ஆம் ஆண்டு மே மாதம் முதல் கடந்த 7 ஆண்டுகளாக நிறுத்தி வைத்திருந்தது. எனினும் ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் இடையேயான மேற்காசிய போர் காரணமாக உலக நாடுகளில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்கும் நோக்கில், நடுக்கடலில் நிற்கும் ஈரான் கப்பல்களில் உள்ள 9 கோடியே 50 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை வாங்க இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு 30 நாள்களுக்கு (வரும் 19-ஆம் தேதி வரை) அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது.

(iii) இதையடுத்து, ஈரானிய கச்சா எண்ணெய்யை இந்தியா மீண்டும் வாங்க ஆரம்பித்துள்ளது. நடுக்கடலில் நிற்கும் ஈரான் கப்பல்களில் உள்ள சுமார் 5 கோடியே 10 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை இந்தியா வாங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. எஞ்சிய கச்சா எண்ணெய் பீப்பாய்களை சீனா, தென்கிழக்கு ஆசிய கண்டத்தில் உள்ள பிற நாடுகளுக்கு ஈரான் விற்றிருக்கலாம் என சொல்லப்படுகிறது.

(iv) இந்தியா வாங்கிய ஈரானிய கச்சா எண்ணெய்யில் 40 லட்சம் பீப்பாய்களுடன் 2 கப்பல்கள் இந்தியாவுக்கு வந்துள்ளன. அதில் ஒரு கப்பல் நேஷனல் ஈரானியன் டேங்கர் நிறுவனத்துக்கு சொந்தமானது. ஈரானின் கார்க் தீவில் இருந்து ஏற்கெனவே ஏற்றப்பட்ட 20 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யுடன், அக்கப்பல் குஜராத் மாநிலம் சிக்காவில் உள்ள துறைமுகத்துக்கு வந்துள்ளது.

(v) இன்னொரு கப்பலான ஜெயா, ஒடிஸா மாநிலம் பாரதீப் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. அந்தக் கப்பலும் கார்க் தீவில் இருந்து மேற்காசிய போர் தொடங்கும் முன்பு ஏற்றப்பட்ட 20 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யுடன் வந்துள்ளது.

(vi) ஹோர்முஸ் நீரிணையை ஷாலிமார், கையிர்பூர் ஆகிய 2 பாகிஸ்தான் சரக்குக் கப்பல்கள் கடந்து செல்ல ஈரான் அதிகாரிகள் திங்கள்கிழமை அனுமதி அளித்தனர். இதைத் தொடர்ந்து, குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து டீசல் மற்றும் கச்சா எண்ணெய் கொண்டுவர, அந்தக் கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து சென்றன. இதன்மூலம் ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல் இடையே போர் தொடங்கிய பின்னர், முதல்முறையாக 2 பாகிஸ்தான் கப்பல்கள் பாரசீக வளைகுடாவுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

3. மத்திய ஐரோப்பிய நாடான ஹங்கேரியில் கடந்த 16 ஆண்டுகளாக பிரதமர் பதவியில் நீடித்த விக்டர் ஆர்பனின் ஆட்சிக்கு மக்கள் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.

(i) கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தலில், ஐரோப்பிய யூனியன் ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்ட பீட்டர் மேக்யார் தலைமையிலான திசாகட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

(ii) ஹங்கேரியின் மொத்தம் உள்ள 199 நாடாளுமன்ற இடங்களில், பீட்டர் மேக்யாரின் கட்சி 138 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க உள்ளது. தேர்தல் முடிவுகள் வெளியானதும் புடாபெஸ்ட் நகரின் வீதிகளில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் திரண்டு, திசாகட்சியின் வெற்றியை உற்சாகமாகக் கொண்டாடினர்.

(iii) வெற்றிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய திசாகட்சித் தலைவர் பீட்டர் மேக்யார், 'இது வெறும் ஆட்சி மாற்றம் அல்ல; இது ஒரு முழுமையான அரசியல் முறை மாற்றம். பிரதமரின் பதவிக்காலத்தை 2 முறைகளாகக் குறைக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்' என்றார்.

(iv) வரும் மே 5-ஆம் தேதிக்குள் புதிய பிரதமராகப் பதவியேற்க திட்டமிட்டுள்ள பீட்டர் மேக்யார், ஹங்கேரியின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே தனது முதல் முன்னுரிமை என்று தெரிவித்தார். உக்ரைன் போர் விவகாரத்தில் விக்டர் ஆர்பனின் ரஷிய ஆதரவு நிலைப்பாட்டை பீட்டர் மேக்யார் மாற்றியமைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹங்கேரியின் இந்தப் புதிய அரசியல் மாற்றம், ஐரோப்பிய யூனியனின் ஒற்றுமையை வலுப்படுத்தும் என்று பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் வாழ்த்து தெரிவித்துள்ளன. இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியும் இவரின் வெற்றிக்கு பகிர்ந்து வாழ்த்துகளைப் கொண்டார்.

(v) ரஷிய அதிபர் புதின், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆகியோருடன் நெருங்கிய நட்பு பாராட்டி வந்த விக்டர் ஆர்பன், தனது தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார். 'மக்களின் தீர்ப்பை மதிக்கிறோம், இனி எதிர்க் கட்சி வரிசையில் நாட்டுக்காகப் பணியாற்றுவோம்' விக்டர் ஆர்பன் என்று அவர் குறிப்பிட்டார்.

4. ஆஸ்திரேலிய ராணுவத்தின் முதல் பெண் தலைமைத் தளபதியாக சூசன் கோய்ல் (55)

நியமிக்கப்பட்டார்.

(i) ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிரடி மாற்றங்களின் ஒரு பகுதியாக லெஃப்டினன்ட் ஜெனரல் சூசன் கோய்ல் இந்த உயரிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

(ii) ஆஸ்திரேலிய ராணுவத்தின் 125 ஆண்டுகால வரலாற்றில் படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் முதல் பெண் சூசன் கோய்ல் ஆவார். கடந்த 1987- ஆம் ஆண்டு ராணுவத்தில் இணைந்த இவர், பல்வேறு உயர் பதவிகளைத் திறம்பட வகித்த அனுபவம் கொண்டவர். தற்போது கூட்டுத்திறன் பிரிவின் தலைவராக இருக்கும் இவர், வரும் ஜூலை மாதம் லெஃப்டினன்ட் ஜெனரல் சைமன் ஸ்டூவர்ட்டிடம் இருந்து பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார்.

(iii) ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையில் பெண்களின் பங்களிப்பு தற்போது 21 சதவீதமாக உள்ளது. வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் இதை 25 சதவீதமாக உயர்த்த அந்நாட்டு அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

5. தாய்லாந்து நாட்டின் புத்தாண்டான சாங்க்ரான் பண்டிகை தொடங்கியதை முன்னிட்டு தலைநகர் பாங்காக்கில் உற்சாகமாக ஒருவர் மீது ஒருவர் தண்ணீரைப் பீச்சியடித்து மகிழ்ந்து, புதிய ஆண்டை நம்பிக்கையுடன் வரவேற்ற மக்கள்.

6. ‘உலக அளவில் வேகமாக மாறிவரும் அரசியல் சூழலில் பருவநிலை மாற்றம், பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்களில் சீனா இன்னும் வலுவான பங்களிப்பை வழங்க வேண்டும்' என்று ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் வலியுறுத்தினார்.

(i) சீன தலைநகர் பெய்ஜிங்கில் பல்கலைக்கழகம் ஒன்றில் உரையாற்றிய அவர், அமெரிக்கா பல சர்வதேச விவகாரங்களில் இருந்து பின்வாங்கி வரும் நிலையில், ஐரோப்பாவும் தனது முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

(ii) ஸ்பெயினின் வர்த்தகப் பற்றாக் குறையில் சீனா 74 சதவீத பங்கைக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டில் இந்தப் பற்றாக்குறை சுமார் 5,000 கோடி டாலராக அதிகரித்துள்ளது கவலையளிக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையே சமநிலையான வர்த்தக உறவை ஏற்படுத்தவும், ஸ்பெயினின் விவசாயம் மற்றும் உற்பத்திப் பொருள்களை சீனாவுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யவும் இப்பயணம் உதவும் என நம்பிக்கை தெரிவித்தார்.

(iii) ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிரான கடும் நிலைப்பாட்டால், பெட்ரோ சான்செஸ் அண்மையில் அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் அதிருப்திக்கு உள்ளானார். மத்திய கிழக்குப் போருக்காக அமெரிக்க விமானங்கள் ஸ்பெயின் வான்வெளியைப் பயன்படுத்தவும் அனுமதி மறுத்தார். தொடர்ந்து, ஈரானில் ஸ்பெயின் நாட்டுத் தூதரகத்தை மீண்டும் திறப்பதாக அறிவித்தார்.

(iv) இத்தகைய சூழலில், கடந்த 4 ஆண்டுகளில் 4-ஆவது முறையாக சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பெட்ரோ சான்செஸ், அந்நாட்டு அதிபர் ஷி ஜின்பிங்கை சந்தித்து, அவருடன் சர்வதேச விவகாரங்கள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தவுள்ளார்.

7. பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் நடந்த தோல்வியுற்ற அமைதிப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, வர்த்தகம் மீண்டும் தொடங்கிய திங்கள்கிழமையன்று அந்நாட்டு பங்குச் சந்தை ஒரே நாளில் 6,464 புள்ளிகள் (3.87 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது.

(i) விற்பனை அழுத்தத்தால் வர்த்தகத் தொடக்கத்திலேயே சரிவைக் கண்ட பாகிஸ்தான் பங்குச் சந்தையின் குறியீடான கேஎஸ்இ-100, பிற்பகலில் ஓரளவு மீட்சி கண்டது. எனினும், மாலையில் வர்த்தகத்தின் இறுதியில் 1,60,726.89 புள்ளிகள் என நிலைபெற்றது.

8. தேசிய விளையாட்டு விருதுகளை தகுதியானோருக்கு வழங்குவதை உறுதி செய்யும் விதமாக, பரிந்துரைக்கப்பட் டோர் பட்டியலை மறுமதிப்பீடு செய்துவருவதன் காரணமாகவே நடப்பாண்டு விருது அறிவிப்பு தாமதமாகிறது' என மத்திய விளையாட்டு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) தேசிய விளையாட்டு விருதுகளானது, வழக்கமாக இந்திய ஹாக்கி ஜாம்பவான் மேஜர் தியான் சந்தின் பிறந்த நாளான ஆகஸ்ட் 29-ஆம் தேதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால், பல்வேறு காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை.

(ii) தேசிய விளையாட்டு விருதுகளுக்காக விருதுக்காக விண்ணப்பிக்கும் நடைமுறை கடந்த ஆண்டு, வழக்கத்தை விட சற்று தாமதமாகவே தொடங்கியது. அதிலிருந்து விருதுக்காகத் தேர்வு செய்யப்பட்டோரின் பரிந்துரைப் பட்டியலை விருது தேர்வுக் குழு மத்திய விளையாட்டு அமைச்சகத்திடம் டிசம்பரில் வழங்கியது.

(iii) அவ்வாறு பரிந்துரைக்கப்பட் டோர் பட்டியலை அமைச்சகம் மறுமதிப்பீடு செய்து வருவதால், விருது பெறுவோர் பட்டியல் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில், மத்திய விளையாட்டு அமைச்சக வட்டாரங்கள் கூறியதாவது:

- அர்ஜுனா விருதுக்காக பரிந்து ரைக்கப்பட்டுள்ளோர் பட்டியல் மறுமதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. அந்த விருதுக்கான மதிப்பு எந்த விதத்திலும் குறைந்து விடக்கூடாது என்பதன் காரணமாகவே இந்த மறுமதிப்பீடு நடவடிக்கையை எடுத்து வருகிறோம்.
- பெரிதாக சாதனைகள் ஏதும் செய்யாதோருக்கு விருதுகளை வழங்கி, நாட்டில் விருது பெற்றோரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பது இல்லை. அதேபோல் தங்களுக்கு விருது வழங்கப் படவில்லை என்று சிலர் வழக்கு தொடுப்பதையும், ஊடகங்களில் விமர்சனங்கள் வைப்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.
- தேர்வுக் குழுவுக்கான அவசியம் இல்லாமல், புள்ளிகள் அடிப்படையிலான தகுதி வரையறை ஒன்று இருப்பது அவசியமாகிறது. அதாவது, ஒரு போட்டியாளர் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றால், பரிசுத் தொகைக்காக அவர் விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. அவருக்கான பரிசுத் தொகை அவரைச் சென்றடையும்.
- அதேபோல், விருதுக்கான தகுதியை அடைவோரை, எந்தவொரு குழுவும் தேர்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல், விருது அவரை இயல்பாகவே சென்றடையும் எனும் வகையில் தகுதி வரையறை கொண்டுவரப்பட வேண்டும் என்று அந்த வட்டாரங்கள் கூறின.
- அமைச்சக வட்டாரங்களின் தகவல்படி, ஹாக்கி வீரர் ஹர்திக் சிங்குக்கு கேல் ரத்னா விருதும், செஸ் வீராங்கனை திவ்யா தேஷ்முக், தடகள வீரர் தேஜஸ்வின் சங்கர் உள்பட 24 பேருக்கு அர்ஜுனா விருதும் வழங்க பரிந்துரைக்கப்படுள்ளதாகத் தெரிகிறது.

9. இந்தியாவில் 2030-இல் நடைபெறவுள்ள காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவைச் சேர்ந்த இரு விளையாட்டுகளுடன் கிரிக்கெட் மற்றும் ஹாக்கியும் நிச்சயம் இடம்பெறும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கூறினார்.

(i) காமன்வெல்த் போட்டிகள் நடைபெறவுள்ள அகமதாபாத் நகரின் தயார்நிலை தொடர்பாக ஆய்வு செய்ய, காமன்வெல்த் விளையாட்டுக் குழு அண்மையில் இந்தியா வந்து சென்றது. அந்தக் குழு, மத்திய அமைச்சர் மாண்டவியாவையும் சந்தித்துப் பேசியிருந்தது. இந்நிலையில், இதுகுறித்து அமைச்சர் மாண்டவியா செய்தி யாளர்களிடம் தில்லியில் கூறிய தாவது:

- 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் சேர்ப்பதற்காக, கபடி, மல்லர்கம்பம், கோ-கோ, யோகா போன்ற இந்திய விளையாட்டுகள் பரிசீலனையில் உள்ளன. இதிலிருந்து நிச்சயம் இரு விளையாட்டுகள் போட்டியில் சேர்க்கப்படும். அத்துடன் கிரிக்கெட் மற்றும் ஹாக்கியும் நிச்சயம் இடம்பெறும்.
- இந்தியா வந்த காமன்வெல்த் விளையாட்டு குழு, திருப்தியுடன் திரும்பிச் சென்றது. நாட்டில் தற்போது நடத்தப்பட்டு வரும் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் அவர்களை ஈர்த்துள்ளது. 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை வெற்றிகரமானதாக நடத்தும் வகையில் விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்த நடவடிக்கையில் 23 அமைச்சகங்கள் அங்கம் வகிக்கின்றன என்று அமைச்சர் மாண்டவியா கூறினார்.
- இந்தியாவில் நடைபெறவுள்ள காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் சுமார் 17 விளையாட்டுகள் வரை இடம்பெறும் எனத் தெரிகிறது. தடகளம், நீச்சல், டேபிள் டென்னிஸ், குத்துச் சண்டை, ஆர்ட்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ் போன்ற விளையாட்டுகள் இடம்பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளன.

10. நடப்பாண்டு மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான ரொக்கப் பரிசுத் தொகையை ரூ.82 கோடியாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) அறிவித்தது. முந்தைய போட்டியுடன் ஒப்பிடுகையில் இது 10 சதவீதம், அதிகமாகும்.

(i) 10-ஆவது மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் வரும் ஜூன் 12 முதல் ஜூலை 5-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. கடந்த முறை 10 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில், இந்தியா உள்பட 12 அணிகள் பங்கேற்கவுள்ளன.

(i) அவற்றின் ஆட்டங்கள் 7 இடங்களில் நடைபெறவுள்ள நிலையில், இறுதி ஆட்டம் லண்டனில் விளையாடப்படவுள்ளது. நியூஸிலாந்து சாம்பியனான கடந்த 2024-இல் இந்தப் போட்டிக்கான பரிசுத் தொகை ரூ.74 கோடியாக இருந்தது, இந்த ஆண்டு ரூ.82 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

11. இந்தியாவிடம் 3 மாதங்களுக்குத் தேவையான நிலக்கரி கையிருப்பு இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

(i) தெலங்கானா தலைநகர் ஹைதராபாதில் நடைபெற்ற நிகழ்ச்சியின் இடையே மத்திய நிலக்கரி மற்றும் கனிமவளத் துறை அமைச்சர் கிஷண் ரெட்டி செய்தியாளர்களிடம் பேசியதாவது:

- நாட்டில் தொடர்ந்து 2-ஆவது ஆண்டாக ஒரு பில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.
- இன்றைய நிலவரப்படி, நமது நாட்டிடம் 90 நாள்களுக்குத் தேவையான நிலக்கரி கையிருப்பு உள்ளது. முன்பு நம்மிடம் 21 முதல் 25 நாள்களுக்கு தேவையான நிலக்கரிதான் கையிருப்பு இருக்கும். ஆனால் தற்போதோ, நமது நாட்டிடம் 90 நாள்களுக்குத் தேவையான 200 மில்லியன் டன் நிலக்கரி கையிருப்பு உள்ளது.
- கனிமவளத் துறையில் இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைக்கவும்,

தற்சார்பு நிலையை அடையவும் மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. கனிமவளத் துறையில் வருமானத்தை ஈட்டுவதற்காக மத்திய அரசு வேலை செய்யவில்லை. தற்சார்பை இலக்காக கொண்டே நடவடிக்கை எடுத்து வருகிறது.

- எதிர்காலத்தில் அரியவகை கனிமங்கள், சுரங்கங்களில் இருந்து தோண்டி எடுக்கப்பட வாய்ப்பு உள்ளது. ஆதலால் இந்தத் துறையில், பொதுத் துறை நிறுவனங்கள், மாநில அரசுகள் உள்ளிட்டோருடன் தனியார் துறை இணைந்து செயல்பட வேண்டும். நகர்ப்புற சுரங்கத்தில் சேகரிக்கப்படும் பழைய சாதனங்களில் இருந்து 30 முதல் 40 சதவீத அரிய வகை கனிமங்கள் எடுக்கப்பட வாய்ப்புள்ளது.

(ii) பழைய குளிர்பதன கருவிகள், குளிர்சாதன பெட்டிகளில் இருந்தும், ஒவ்வொரு நகர பகுதியிலும் சேகரிக்கப்படும் பழைய பொருள்களில் இருந்தும் அரிய வகை கனிமங்களைப் பிரித்தெடுப்பது குறித்த செயல்திட்டத்தை மத்திய அரசு உருவாக்கி வருகிறது என்றார் அவர்.

12. ஜாலியன் வாலாபாக்கில் கடந்த 1919-ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

(i) ஆங்கிலேயர்களின் காலனியாதிக்கத்தில் இந்தியர் இருந்தபோது, பஞ்சாப்பின் அமிருதசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் கடந்த 1919-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி ரௌலட் அடக்குமுறை சட்டத்தை எதிர்த்து நூற்றுக்கணக்கானோர் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

(ii) அப்போது ஜெனரல் டயர் உத்தரவின்பேரில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 700 பேர் வரை கொல்லப்பட்டனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உலக வரலாற்றில் அழிக்க முடியாத கறையாகப் படிந்து விட்ட இந்த சம்பவத்தின் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

13. எண்ம தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம் 2023-க்கு எதிராக தாக்கல் செய்த மனு மீது பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு நோட்டீஸ் பிறப்பித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

(i) ராஜஸ்தானைச் சேர்ந்த மஸ்தூர் விவசாயசக்தி சங்கம், சமூக ஆர்வலர்கள் அருணாராய், நிகில் டே, சங்கர் சிங் ராவத் ஆகியோர் சார்பில், தகவல் பெறும் உரிமை (ஆர்டிஐ) சட்டப் பிரிவு 8(1)(ஜே)-க்கு மாற்றாக கொண்டுவரப்பட்டுள்ள எண்ம தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டப் பிரிவு 44(3)-க்கு எதிராக இந்தப் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது.

(ii) அதில், 'எண்ம தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டத்தின் 44(3) பிரிவு, தகவல் பெறும் உரிமை சட்டத்தின் வெளிப்படைத்தன்மையை நீர்த்துப்போகச் செய்வதாக உள்ளது. குறிப்பாக, பயனாளிகளின் தரவுகள், வருகைப் பதிவேடுகள், சமூக தணிக்கைப் பதிவுகள் உள்ளிட்ட விவரங்களை முன்கூட்டியே வெளியிட அனுமதிக்கும் தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 4 மற்றும் குடிமக்களின் உரிமைகளைப் பாதிக்கும் சமூக தணிக்கை பதிவுகள், பயனாளிகள் தரவுகள் உள்ளிட்ட விவரங்களை வெளியிட வழிவகுக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 21 ஆகிய பிரிவுகளை நீர்த்துப்போகச் செய்வதாக உள்ளது.

(iii) எனவே, எண்ம தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 44(3)-ஐ, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 14, 19(1) மற்றும் 21 ஆகிய பிரிவுகளை மீறுவதாக அறிவித்து சட்டப்பிரிவை ரத்து செய்வதோடு, தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 8(1)(ஜே)-ஐ மீட்டெடுத்து, கடந்த 2025-ஆம் ஆண்டு நவம்பர் 13-ஆம் தேதியிலிருந்து முன்தேதியிட்டு அமல்படுத்தி உத்தரவிட

வேண்டும்' என்று கோரப்பட்டது.

(iv) இந்த மனுவை பரிசீலித்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வு, இந்த மனு மீது பதிலளிக்குமாறு மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம், மத்திய சட்ட அமைச்சகத்துக்கு நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டதோடு, இந்த வழக்கில் ராஜஸ்தான் மாநில அரசையும் வாதியாக சேர்க்க உத்தரவிட்டனர்.

14. அம்பேத்கரின் பிறந்த தினம் செவ்வாய்க்கிழமை (ஏப்.14) கொண்டாடப்படுகிறது.

15. மேக்கேதாட்டு அணை தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மறுஆய்வு செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்ற அறையில் விசாரிக்க வேண்டும்என உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு முறையிட்டது.

(i) மேக்கேதாட்டு அணை விவகாரத்தில் தமிழக அரசு, 2018-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், ‘மேக்கேதாட்டு சமநிலை நீர்த்தேக்கம் மற்றும் குடிநீர் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையைத்தயாரிக்கும் பணியைத் தொடர, கர்நாடக அரசின் ஓர் அங்கமான பெங்களூரைச் சேர்ந்த கர்நாடக காவிரி நீர்வாரி நிகம் நிறுவனத்துக்கு, கடந்த 2018, நவ.22-இல் மத்திய நீர் ஆணையம் வழங்கிய அனுமதிக்குத் தடை விதிக்க வேண்டும் மற்றும் அந்த அனுமதியை திரும்பப் பெற உத்தரவிட வேண்டும்' என தமிழக அரசு கோரியிருந்தது.

(ii) தமிழக அரசின் அந்த மனுவை கடந்த ஆண்டு நவ.13-இல் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அது தொடர்பான உத்தரவில் உச்சநீதிமன்றம்,‘ கர்நாடக அரசு காவிரி நதியின் குறுக்கே மேக்கேதாட்டு என்னுமிடத்தில் அணையைக் கட்ட உத்தேசித்துள்ளது. இப்பிரச்னை குறித்து ஆராயும் பொறுப்பு நிபுணர் குழுவிடம் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம் நிபுணர் குழுவின் பரிசீலனையில் உள்ள நிலையில், தமிழக அரசு தாக்கல் செய்த மனுவானது முற்றிலும் தவறான புரிதலின் அடிப்படையில் அமைந்திருப்பதாக நீதிமன்றம் கருதுகிறது. ஒவ்வொரு மாநிலமும் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள நீரைப் பயன்படுத்திக்கொள்ள முழுச் சுதந்திரம் பெற்றுள்ளது. ஒரு குறிப்பிட்ட மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நீரின் பயன்பாடு தொடர்பான முடிவுகளில் தலையிடுவதற்கு, வேறெந்த மாநிலத்திற்கும் எவ்வித உரிமையும் இல்லை' என்று கூறியிருந்தது.

(iii) "இதனை எதிர்த்து தமிழக அரசு கடந்த ஆண்டு டிச.11-இல் உச்சநீ திமன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்தது. 'காவிரி வழக்கில் நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் ஏற்கெனவே வழங்கிய தீர்ப்புகளில் மேக்கேதாட்டு திட்டத்திற்கு எந்த அனுமதியும் வழங்கப்படாத நிலையில், நவ.13-இல் பிறப்பித்த உத்தரவு ஏற்றுக்கொள்ள முடியாதது. அது ஏற்கெனவே நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளுக்கு எதிரானது. எனவே, அந்த உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டும்' என தமிழக அரசு மனுவில் கோரியுள்ளது.

(iv) இந்த மறுஆய்வு மனு தலைமை நீதிபதி சூர்யகாந்த் மற்றும் நீதிபதிகள் கே.வினோத் சந்திரன், விபுல் எம்.பஞ்சோலி ஆகியோரின் அறையில் புதன்கிழமை (ஏப்15) விசாரணைக்குப் பட்டியலிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த வழக்கை நீதிபதிகளின் அறைக்கு பதிலாக நீதிமன்ற அறையிலேயே விசாரணை மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசின் மூத்த வழக்குரைஞர் கிருஷ்ணமூர்த்தி தலைமை நீதிபதி சூர்ய காந்த் அமர்வில் திங்கள்கிழமை முறையிட்டார். அதனை பரிசீலிப்பதாக தலைமை நீதிபதி சூர்யகாந்த் கூறினார்.

16. தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில், கடந்த மூன்றரை மாதங்களில் 100 பேரின் உடல் உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டு 500-க்கும் மேற்பட்டோருக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

(i) இதுகுறித்து தமிழக உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலர் டாக்டர் என்.கோபாலகிருஷ்ணன் கூறியதாவது:

- நாட்டின் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் உறுப்பு மாற்று நடவடிக்கைகள் சிறப்பாகவும், மேம்பட்ட நிலையிலும் உள்ளன. அதன் காரணமாகவே இந்திய அளவில் தமிழகம் தொடர்ந்து உடல் உறுப்பு தானத்தில் முதலிடத்தில் உள்ளது.
- உறுப்பு தானம் செய்பவர்களின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று கடந்த 2023 செப்டம்பர் 23-ஆம் தேதி முதல்வர் அறிவித்தார். இதைத் தொடர்ந்து இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இத்தகைய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- கடந்த 2024-இல் 268 பேர் உறுப்பு தானம் செய்துள்ளனர். அவர்களிடமிருந்து தானமாக பெற்ற உறுப்புகள் வாயிலாக 1,500 பேர் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மறுவாழ்வு பெற்றுள்ளனர். கடந்த ஆண்டில் மூளைச்சாவு அடைந்த 266 பேரிடம் இருந்து உறுப்புகள் தானமாக பெறப்பட்டு 1,476 பேருக்கு பொருத்தப்பட்டுள்ளது.
- இந்நிலையில், நிகழாண்டில் 100 பேரின் உடல் உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டுள்ளன. 177 சிறுநீரகங்களும், 80 கல்லீரல்களும் தானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. இதைத் தவிர 28 பேரின் இதயம், 29 பேரின் நுரையீரல்களும் பெறப்பட்டு தகுதியானவர்களுக்குப் பொருத்தப்பட்டுள்ளது. மொத்தம் 550 உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டுள்ளது முன்னெப்போதும் நிகழ்ந்திராத ஒன்று.
- தமிழகத்தில் இதுவரை 2,421 கொடையாளர்களிடம் இருந்து 14,146 உறுப்புகள் தானமாக பெறப்பட்டுள்ளன. அவற்றில் 4,270 சிறு நீரகங்களும், 3,574 விழி வெண்படலங்களும், 2,144 கல்லீரல்களும், 1,097 இதய வால்வுகளும், 1,011 இதயங்களும், 1,047 நுரையீரல்களும் தானமாகப் பெறப்பட்டுள்ளன. இதன் வாயிலாக பல்லாயிரக்கணக் கானோர் மறுவாழ்வு பெற்றுள்ளனர் என்றார்.

17. அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா ராஜினாமா மற்றும் இந்தியாவில் நீதித்துறை பொறுப்புடைமை தொடர்பான சட்ட வழிமுறைகள்.

(i) காலவரிசைப்படி அமைந்த விவரக் குறிப்பு (2025–2026)

- மார்ச் 14, 2025: தில்லியில் அமைந்துள்ள நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் அதிகாரப்பூர்வ அரசு இல்லத்தில் தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஒரு அறையில் பணக்கட்டுகளைக் கொண்ட பைகள்—அவற்றில் சில பகுதியளவு எரிந்த நிலையில்—கண்டெடுக்கப்பட்டன.
- மார்ச் 2025 (ஆரம்பக்கட்ட நடவடிக்கை): அப்போதைய இந்தியத் தலைமை நீதிபதி (CJI) சஞ்சீவ் கன்னா, மூன்று நீதிபதிகள் அடங்கிய ஒரு உள்விசாரணைக் குழுவை அமைத்தார். அதே நேரத்தில், நீதிபதி வர்மா அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்; மேலும், விசாரணை நடைபெறும் காலத்தில் அவருக்கு எந்தவிதமான நீதித்துறைப் பணிகளும் ஒதுக்கப்படக்கூடாது என்று ஓர் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.
- விசாரணைக் குழுவின் கண்டுபிடிப்புகள்: நீதிபதியின் நடத்தை மீது "சந்தேகத்தின் நிழல்" விழுந்திருப்பதாக அக்குழு அறிக்கை சமர்ப்பித்தது. இதனைத் தொடர்ந்து, தலைமை நீதிபதி அவருக்குப் பதவி விலகுமாறு அறிவுறுத்தினார்; ஆனால், நீதிபதி வர்மா ஆரம்பத்தில் அதற்கு மறுப்பு தெரிவித்தார்.

- நாடாளுமன்ற அளவிலான நடவடிக்கை: நீதிபதி பதவி விலக மறுப்பு தெரிவித்ததையடுத்து, 208 நாடாளுமன்ற உறுப்பினர்கள் (மக்களவையிலிருந்து 146 பேரும், மாநிலங்களவையிலிருந்து 62 பேரும்) அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான முறையான அறிவிப்பைச் சமர்ப்பித்தனர்.
- விசாரணைக் குழு அமைத்தல்: பதவி நீக்க நடைமுறையின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக, உச்ச நீதிமன்ற நீதிபதி அரவிந்த் குமார் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அமைத்தார்.
- உச்ச நீதிமன்றத்தில் மனு: நாடாளுமன்ற விசாரணைக் குழு அமைக்கப்பட்டதை எதிர்த்து நீதிபதி வர்மா உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார்; எனினும், நீதிமன்றம் அவரது மனுவைத் தள்ளுபடி செய்தது.
- ஏப்ரல் 9, 2026 (வியாழக்கிழமை): பதவி நீக்க நடைமுறையின் வேகம் அதிகரித்த நிலையில், நீதிபதி வர்மா அதிகாரப்பூர்வமாகப் பதவி விலகினார். அவர் உண்மையில் ஜனவரி 5, 2031 அன்றுதான் ஓய்வு பெறத் திட்டமிடப்பட்டிருந்தது; இதன் மூலம், அவர் தனது பதவியை ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே துறந்தார் என்பது தெளிவாகிறது.

(ii) அரசியலமைப்பு மற்றும் சட்டக் கட்டமைப்பு

- அரசியலமைப்பின் சரத்து 124(4): உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான ஒரே வழிமுறையை இச்சரத்து வழங்குகிறது. "நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது இயலாமை" ஆகிய காரணங்களின் அடிப்படையில் மட்டுமே நீதிபதியைப் பதவியிலிருந்து நீக்க முடியும்.
- நீதிபதிகள் (விசாரணை) சட்டம், பிரிவு 3(2): நாடாளுமன்றம் வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னதாக, நீதிபதி மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக—உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஒருவர் மற்றும் ஒரு புகழ்பெற்ற சட்ட வல்லுநர் ஆகியோரை உள்ளடக்கிய—மூன்று உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கட்டாயத்தை இப்பிரிவு வரையறுக்கிறது.
- நாடாளுமன்ற வரம்புகள்: ஒரு பதவி நீக்கத் தீர்மானத்தைத் தொடங்குவதற்கு, மக்களவையின் குறைந்தது 100 உறுப்பினர்கள் அல்லது மாநிலங்களவையின் 50 உறுப்பினர்கள் ஒரு அறிவிப்பில் கையொப்பமிட வேண்டும்.
- நீதித்துறை சுதந்திரம்: நீதிபதிகள் நிர்வாகத்தின் அழுத்தமின்றி செயல்படுவதை உறுதி செய்வதற்காக, அரசியலமைப்பு அவர்களுக்கு குறிப்பிடத்தக்க பாதுகாப்புகளையும் "சலுகைகளையும்" வழங்கினாலும், இந்தப் பாதுகாப்புகள் ஊழலுக்கு எதிரான ஒரு கேடயம் அல்ல.

(iii) பதவி நீக்கங்களின் வரலாற்றுச் சட்டப் பின்னணி

இந்திய வரலாற்றில் எந்த நீதிபதியும் நாடாளுமன்றத்தில் இறுதி வாக்கெடுப்பின் மூலம் முழுமையாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டதில்லை, ஏனெனில் பெரும்பாலானோர் இந்த செயல்முறை முடிவடைவதற்கு முன்பே ராஜினாமா செய்துவிடுகின்றனர்:

- நீதிபதி வி. ராமசாமி (1991): பதவி நீக்கத் தீர்மானம் மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறாததால் தோல்வியடைந்தது.
- நீதிபதி சௌமித்ரா சென் (2011): மாநிலங்களவை தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர், ஆனால் மக்களவை வாக்களிப்பதற்கு முன்பு ராஜினாமா செய்தார்.
- நீதிபதி பி.டி. தினகரன்: மாநிலங்களவை பதவி நீக்கத் தீர்மானத்தை

எடுத்துக்கொள்வதற்கு முன்பு ராஜினாமா செய்தார்.

- நீதிபதி ஜே.பி. பர்திவாலா (2015): அவர் தனது தீர்ப்பிலிருந்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை நீக்கிய பிறகு, அந்த மனு கைவிடப்பட்டது.
- நீதிபதி எஸ்.கே. கங்கேலே: பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளை ஆதரிக்க எந்த ஆதாரமும் இல்லை என்று ஒரு விசாரணை கண்டறிந்த பிறகு, அந்த மனு கைவிடப்பட்டது.

(iv) பதவி விலகலுக்குப் பிந்தைய சட்டப் பகுப்பாய்வு

- சட்டப் பாதுகாப்பு இழப்பு: பதவி விலகுவது குற்றவியல் சட்டத்திலிருந்து சட்டப் பாதுகாப்பை வழங்குவதில்லை. பதவி விலகுவதன் மூலம், வர்மா இனி ஒரு நீதிபதி அல்ல, இது கைது மற்றும் விசாரணை தொடர்பான நீதித்துறைப் பதவியின் "தடைகளை" நீக்குகிறது.
- சாத்தியமான குற்றவியல் விசாரணை: ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ், அவரது வீட்டில் கண்டெடுக்கப்பட்ட பணத்தின் மூலத்தை அதிகாரிகள் இப்போது விசாரிக்க முடியும்.
- அமைப்பு ரீதியான தூய்மைப்படுத்தல்: நீதித்துறையிலிருந்து "ஊழல் கறையை" அகற்றவும், பொது நம்பிக்கையை மீட்டெடுக்கவும் பணத்தின் மூலம் பகிரங்கமாக அடையாளம் காணப்பட வேண்டும். இது வெளிப்படையான, சட்டரீதியான தீர்வு தேவைப்படும் ஒரு "தீர்க்கப்படாத புதிராக" இந்தச் சூழ்நிலையை வகைப்படுத்துகிறது.

18. வாக்குரிமையின் காலவரிசை மற்றும் பகுப்பாய்வு வரலாறு; அரசியல் அதிகாரத்தைத் தீர்மானிக்கும் முதன்மை காரணியாகத் தேர்தல் அறிக்கைகளின் பரிணாம வளர்ச்சி :-

(i) பண்டைய மற்றும் நவீன காலத் தொடக்கங்கள்

- கி.மு. 139 (ரோம்): உலகின் முதல் வாக்குச்சீட்டு முறை (ballot system) ரோமில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பண்டைய தமிழகம்: சோழர் காலத்தில், உள்ளூர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு ஜனநாயக முறையாக "குடவோலை" முறை பயன்படுத்தப்பட்டது.
- 1295 (பிரிட்டன்): பிரிட்டிஷ் நாடாளுமன்றம் முதன்முதலில் நிறுவப்பட்டது.
- 1535 (பிரான்ஸ்): உலகின் முதலாவது தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.
- 1620: "தேர்தல் அறிக்கை" (Election Manifesto) எனும் குறிப்பிட்ட கலைச்சொல் முதன்முறையாக முறைசார் பயன்பாட்டிற்கு வந்தது.

(ii) 18 மற்றும் 19-ஆம் நூற்றாண்டு மைல்கற்கள்

- 1776 (அமெரிக்கா): ஜூலை 4, 1776 அன்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திரம் பெற்றது.
- 1787 (அமெரிக்கா): அமெரிக்க செனட் சபைக்கு முதன்முறையாகத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.
- 1789 (பிரான்ஸ்): பிரெஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து, குடிமக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1820 (பிரிட்டன்): முதல் ஜனநாயகக் கட்சி அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது.
- 1850 (ஆஸ்திரேலியா): இரகசிய வாக்குச்சீட்டு முறை முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது; இதில் வாக்குச்சீட்டுகளிலேயே வாக்காளர்களின் பெயர்கள் அச்சிடப்பட்டிருந்தன.

- 1875 (ஜெர்மனி): தேர்தல் காலங்களில் தேர்தல் அறிக்கைகளை வெளியிடும் நடைமுறை முறைசார்ந்து நிறுவப்பட்டது.

(iii) 20-ஆம் நூற்றாண்டு: வாக்குரிமை மற்றும் இந்தியத் தளங்கள்

- 1919 (இந்தியா): மாண்டேகு-செம்ஸ்ஃபோர்ட் சட்டம் (இரட்டை ஆட்சி முறை) மூலம், சென்னை, பம்பாய் மற்றும் வங்காளம் உள்ளிட்ட 10 முக்கிய மாகாணங்களில் தேர்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- 1920 (இந்தியா/சென்னை): நேரடித் தேர்தல்கள் முதன்முறையாக நடத்தப்பட்டன; இந்தியாவில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையையும், தேர்தலில் போட்டியிடும் உரிமையையும் வழங்கிய முதல் மாகாணமாக சென்னை மாகாணம் திகழ்ந்தது.
- 1928 (பிரிட்டன்): ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருபாலருக்கும் பொதுவான வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1937 (இந்தியா): மாகாணச் சட்டமன்றத் தேர்தல்களுக்காக, இந்தியத் தேசிய காங்கிரஸ் இந்தியாவில் தனது முதல் குறிப்பிடத்தக்க தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. * 1944 (பிரான்ஸ்): பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.
- 1949 (சுவிட்சர்லாந்து): பெண்கள் வாக்களிக்கும் உரிமையை வென்றெடுத்தனர்.
- இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலம் (உலகளாவிய): இந்தியா, மலேசியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் ஜனநாயகம் நிறுவப்பட்டது.

(iv) சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவும் தேர்தல் அறிக்கைகளின் பரிணாம வளர்ச்சியும் :-

- ஜனவரி 25, 1950: இந்தியத் தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டது.
- 1952: வண்ணப் பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுகளைப் பயன்படுத்தி இந்தியா தனது முதல் பொதுத் தேர்தலை நடத்தியது.
- 1952–1970 (கருத்தியல் கட்டம்): தேர்தல் அறிக்கைகள் முதன்மையாகக் கட்சியின் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன; இறுதித் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதில் அவற்றின் தாக்கம் மிதமான அளவிலேயே இருந்தது.
- 1970 முதல் (உலகளாவிய): தென் கொரியா, துருக்கி, ஈரான் மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளில் தேர்தல் முறைகள் நடைமுறைக்கு வந்தன.
- 1970-க்குப் பிந்தைய காலம் (மக்களீர்ப்பு வாக்குறுதிக் கட்டம்): தேர்தல் அறிக்கைகள் ஏழை மக்களுக்கான சலுகைகள் மற்றும் இலவசங்களை வழங்குவதை நோக்கித் திசைமாறின; இவை தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் முதன்மையான காரணியாக உருவெடுத்தன.
- 1990: இந்தியத் தேர்தல்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) அறிமுகப்படுத்தப்பட்டன.
- 2000–2025: கடந்த 25 ஆண்டுகளில், தேர்தல் அறிக்கைகள் வெறும் "வாக்காளர் வழிகாட்டிகளாக" இருந்த நிலையிலிருந்து மாறி, ஒரு முதன்மையான அரசியல் ஆயுதமாகப் பரிணமித்துள்ளன; தற்போது, எந்தவொரு தேர்தல் பிரச்சாரத்திலும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் நிகழ்வாகத் தேர்தல் அறிக்கைகளின் வெளியீடு திகழ்கிறது.

(v) தற்போதைய உலகளாவிய மற்றும் தேசியப் புள்ளிவிவரங்களின் பகுப்பாய்வுச் சுருக்கம்

- உலகளாவிய ஆட்சிமுறை குறித்த உண்மைகள்: உலகளவில் மொத்தம் 251 நாடுகள்

உள்ளன; இவற்றில் 193 நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்களாக உள்ளன. 81 நாடுகள் ஜனநாயக ஆட்சிமுறையைப் பின்பற்றினாலும், 70-க்கும் மேற்பட்ட நாடுகள் மட்டுமே முறையாகத் தேர்தல்களை நடத்துகின்றன.
- முடியாட்சி முறைகள்: 43 நாடுகள் முடியாட்சி முறையைப் பின்பற்றுகின்றன; குவைத், சவுதி அரேபியா, ஓமன், கத்தார் மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளில் முழுமையான முடியாட்சி முறையே இன்றும் நடைமுறையில் உள்ளது.
- அரசியல் கட்சிகளுக்கான தடைகள்: மேற்கு ஆசிய நாடுகளின் சில பகுதிகளிலும், ஆப்கானிஸ்தானிலும் அரசியல் கட்சிகள் செயல்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் வரலாற்றுத் தேர்தல் கணக்கு: 2024-ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியா இதுவரை 18 மக்களவைத் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. 2021 வரையிலான காலகட்டத்தில், தமிழ்நாடு 16 சட்டமன்றத் தேர்தல்களைக் கண்டுள்ளது.

2026 தமிழ்நாடு தேர்தல்கள்

- இளைஞர் சக்தி: வாக்காளர்களில் 41.5% பேர் (2.38 கோடி வாக்காளர்கள்) 39 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்; இவர்களில் 14.59 லட்சம் பேர் முதல் முறையாக வாக்களிப்பவர்கள் ஆவர்.
- தேர்தல் அறிக்கை "ஈர்ப்புகள்": இந்த வாக்காளர் பிரிவை ஈர்ப்பதற்காக, அரசியல் கட்சிகள் குறிப்பிட்ட வாக்குறுதிகளை முன்வைக்கின்றன:
- திமுக:ஐந்தாண்டுகளில் 50 லட்சம் வேலைவாய்ப்புகள்.
- அதிமுக:இளைஞர்களின் தொழில் முயற்சிகளுக்கு ₹25 லட்சம் கடன் உதவி.
- TVK (விஜய்): ₹4,000 வேலையின்மை உதவித்தொகை மற்றும் "அண்ணா சீர் திட்டம்" (திருமணத்திற்கு 1 சவரன் தங்கம்).
- காங்கிரஸ்: உள்ளூர் பட்டதாரிப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் "டியூஷன் அக்கா" திட்டம்.

வாக்காளர்கள் இப்போது தேர்தல் அறிக்கைகளை, தங்கள் வாக்குகளுக்குப் பிரதிபலனாகத் தாங்கள் எதைப் பெறப்போகிறோம் என்பதற்கான ஒரு "வாக்காளர் வழிகாட்டியாகவே" கருதுவதால், வெற்றி அல்லது தோல்வியைத் தீர்மானிப்பதில் இந்த ஆவணங்களே மிக முக்கியமான ஒற்றைக் காரணியாக உருவெடுத்துள்ளன.

19. தமிழ் புத்தாண்டு மற்றும் அதன் பரந்த இந்தியச் சூழல் குறித்த தத்துவ, வரலாற்று மற்றும் அறிவியல் ரீதியான மதிப்பீடு :-

(i) கலாச்சார மற்றும் தத்துவ முக்கியத்துவம்

- தமிழ் புத்தாண்டு என்பது வெறும் ஒரு பாரம்பரியக் கொண்டாட்டம் மட்டுமல்ல;அது முன்னோர்களின் ஞானத்தை அங்கீகரிப்பதாகவும், பாரம்பரியம், குடும்ப விழுமியங்கள், ஆன்மீகம் மற்றும் சமூக ஒழுங்கு ஆகியவற்றை ஒருங்கிணைப்பதாகவும் அமைகிறது.
- இது ஒரு மாற்றத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது; இதில் கடந்தகால அனுபவங்கள், எதிர்காலத்திற்கான புதிய நம்பிக்கைகளைக் கட்டமைக்கப் பயன்படுத்தப்படுகின்றன.
- சித்திரை மாதம் விவசாயச் சுழற்சியின் தொடக்கத்தை அறிவிக்கிறது. இது விவசாயிகள் நிலத்தைத் தயார்படுத்தத் தொடங்கும் காலமாகும்; இது "வேலையே வழிபாடு" என்ற பாரம்பரியச் சிந்தனையைப் பிரதிபலிக்கிறது.

(ii) 2026-ஆம் ஆண்டும் 60 ஆண்டுச் சுழற்சியும்

- தமிழ் மரபில், ஆண்டுகள் ஒரு 60 ஆண்டுச் சுழற்சி முறையில் பெயரிடப்படுகின்றன.
- ஏப்ரல் 14, 2026 அன்று தொடங்கும் ஆண்டு "பரபாவ" (Parabhava) என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது அந்த 60 ஆண்டுச் சுழற்சியில் வரும் 40-வது ஆண்டாகும்.

(iii) தேசிய ஒற்றுமை: இந்தியா முழுவதும் அறுவடைத் திருவிழாக்கள்

பெயர்கள் மாறுபட்டாலும், புத்தாண்டு மற்றும் அறுவடைத் திருவிழாக்களின் உணர்வு இந்தியா முழுவதும் ஏப்ரல் 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் கொண்டாடப்படுகிறது; இது நாட்டின் கலாச்சார ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது:

- பஞ்சாப்: ஒரு முக்கிய அறுவடைத் திருவிழாவாக "பைசாகி" (Baisakhi) என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.
- கேரளா: "விஷு" (Vishu) என்று அழைக்கப்படுகிறது; இதில் புகழ்பெற்ற "கனி காணல்" (மங்கலப் பொருட்களை முதன்முதலில் தரிசிக்கும் மரபு) என்னும் வழக்கம் இடம்பெறுகிறது.
- அசாம்: "பிஹு" (Bihu) என்று கொண்டாடப்படுகிறது.
- மேற்கு வங்கம்: "போஹேலா பொய்ஷாக்" (Pohela Boishakh) என்று கொண்டாடப்படுகிறது.
- பிற மாநிலங்கள்: மணிப்பூர், திரிபுரா, ஒடிசா, பீகார், உத்தரப்பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், ஹரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களும் இக்காலகட்டத்தில் தத்தம் புத்தாண்டுகளைக் கொண்டாடுகின்றன.
- உத்தரகாண்ட்: கங்கை நதி பூமிக்கு இறங்கி வந்ததாக நம்பப்படும் இந்நாளில், ஹரித்வாரில் திரளும் பெருங்கூட்டத்தினர் கங்கையில் நீராடி இத்திருநாளைக் கொண்டாடுகின்றனர்.
- தெலுங்கு மற்றும் மராத்தி: தெலுங்கு பேசும் மக்கள் சமீபத்தில் "உகாதி" (Ugadi) பண்டிகையைக் கொண்டாடினர்; மராத்தி மற்றும் கொங்கணி சமூகத்தினர் "குடி பட்வா" (Gudi Padwa) பண்டிகையைக் கொண்டாடினர்.

(iv) வரலாற்று மற்றும் இலக்கிய முக்கியத்துவம்

- பண்டைய மரபு: தமிழ் மக்களின் தொன்மையை வலியுறுத்த, "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே" (கல் தோன்றி, மண் இன்னும் தோன்றாத காலத்திலேயே) என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது.
- சங்க இலக்கியச் சான்றுகள்:
- "சிறுபாணாற்றுப்படை" எனும் நூல், சூரியனைச் சுற்றி கோள்கள் வலம் வருவதை விவரிக்கிறது; இது பண்டைய தமிழர்கள் சூரிய மையக் கோட்பாட்டை (heliocentric nature) அறிந்திருந்தார்கள் என்பதற்குச் சான்றாக அமைகிறது.
- "புறநானூறு" எனும் நூல், சனி கோளை "மைம்மீன்" (இருண்ட விண்மீன்) எனக் குறிப்பிடுகிறது; இது பண்டைய தமிழர்களின் மேம்பட்ட வானியல் நோக்கீட்டுத் திறனை வெளிப்படுத்துகிறது.
- "அகநானூறு" எனும் நூல், திருமணம் போன்ற முக்கிய நிகழ்வுகளுக்குப் பண்டைய தமிழர்கள் நன்னேரங்களையும் நல்ல நாட்களையும் எவ்வளவு துல்லியமாகத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதைப் பதிவு செய்துள்ளது.
- வரலாற்றுச் சான்றோர்: கணியன் பூங்குன்றனார் என்பவரின் பெயரில் வரும் "கணியன்" எனும் சொல், வானியல் நிகழ்வுகளை முன்னறிவிக்கும் ஆற்றல் பெற்றவர்களைக் குறிப்பதாகும். தொல்காப்பியர் இத்தகைய அறிஞர்களை

"அறிவர்" (அறிவுடையோர்) என்றே குறிப்பிட்டுள்ளார்.

(v) அறிவியல் மற்றும் வானியல் அடிப்படைகள்

- தமிழ்ப் புத்தாண்டு, பூமி சூரியனைச் சுற்றிவரும் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டது; பூமி சூரியனை ஒருமுறை சுற்றிவர 365.25 நாட்கள் ஆகின்றன.
- காலத்தைக் கணக்கிடுவதற்கான இரண்டு பண்டைய முறைகள் நடைமுறையில் இருந்தன: "சௌரம்" (சூரியனை அடிப்படையாகக் கொண்டது) மற்றும் "சாந்திரம்" (நிலவை அடிப்படையாகக் கொண்டது).
- பஞ்சாங்கம் (வானியல் நாட்காட்டி): கோவில்களில் "பஞ்சாங்கம்" வாசிப்பது தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டங்களின் மையமான ஒரு சடங்காகத் திகழ்கிறது.
- இது ஐந்து முக்கிய அங்கங்களைக் (கூறுகளைக்) கொண்டுள்ளது: வாரம் (கிழமை), திதி, கரணம், நட்சத்திரம் (விண்மீன்) மற்றும் யோகம்.
- வரலாற்று ரீதியாக, வரவிருக்கும் ஆண்டில் பெய்யக்கூடிய மழை அளவையும், பயிர் விளைச்சலையும் முன்னறிவிக்கவே இப்பஞ்சாங்கம் பயன்படுத்தப்பட்டு வந்தது.

(vi) சடங்குகளும் மரபுகளும்

- இயற்கையின் தாக்கம்: சித்திரை மாதம் "வசந்த காலத்துடன்" (இளவேனிற்காலத்துடன்) இணைந்து வருகிறது; இக்காலத்தில் வேம்பு, ஆலமரம் போன்ற மரங்களில் புதிய தளிர்களும் இலைகளும் துளிர்க்கின்றன, மலர்கள் பூக்கின்றன; இது இயற்கையில் ஒரு புதிய தொடக்கத்தை உணர்த்துகிறது.
- அறுசுவைகள்: தமிழ்ப் புத்தாண்டன்று "மாங்காய் பச்சடி"யை உண்பது கட்டாயமான ஒரு மரபாகும்; இது வாழ்க்கையின் தத்துவத்தை உணர்த்தும் ஒரு குறியீடாக அமைகிறது.
- இந்த மாங்காய் பச்சடியில் இனிப்பு, புளிப்பு, உப்பு, துவர்ப்பு, கார்ப்பு மற்றும் கசப்பு ஆகிய ஆறு சுவைகள் இடம்பெற்றிருக்கும்.
- இதில் கசப்புச் சுவை (வேப்பம்பூ) வேண்டுமென்றே சேர்க்கப்படுகிறது; இன்பம் மற்றும் துன்பம் ஆகிய இரண்டையும் சமமான மனநிலையுடன் (சமசித்தத்துடன்) ஏற்றுக்கொள்ள வேண்டும் எனும் வாழ்க்கைப் பாடத்தை உணர்த்துவதே இதன் நோக்கமாகும்.

(vii) உலகளாவிய பரவல்

- தமிழர்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் புலம்பெயர்ந்து வாழ்வதால், தமிழ்ப் புத்தாண்டுத் திருவிழா இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் மிகுந்த பாரம்பரிய உணர்வுடன் கொண்டாடப்படுகிறது; இப்பகுதிகளில் தமிழர்களின் மரபுகள் கடந்த 1000 ஆண்டுகளுக்கும் மேலாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' எனும் இலக்கை முன்வைத்து, நேர்மறைச் சிந்தனையுடனும் நம்பிக்கையுடனும் புத்தாண்டைக் கொண்டாட இளைஞர்கள் அழைக்கப்பட வேண்டும்